சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **156 / 2022**

பெயர்: வெள்ளையம்மாள் ம.சா. 1 தேதி 14.10.2025

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து சம்மந்தமாக காவல் துறையில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். விபத்து சமயத்தில் எனது கணவர் தென்புற ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்துக்கொண்டிருந்தார். முதல் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வாகனமானது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது. மேற்படி முதல் எதிர்மனுதாரர் வாகனத்தை மெதுவாக தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றாலும் எனது கணவர் தான் சாலையை திடீரென்று கடக்க முயற்சி செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சாலை விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சாலை விபத்திற்கு பின்னர் இரண்டு நாள் கழித்து தான் இறந்தார். எனது கணவர் திருச்சி அரசு மருத்துவமனையில் வைத்து தான் இறந்தார். இந்த சாலை விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் எனது கணவர் இறக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் மாதம் ரூ.10,000/- சம்பாதித்து வருவதாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவரின் வருமானத்தை நம்பி தான் நானும், மற்ற மனுதாரர்களும் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 மனுதாரர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. 3 மற்றும் 4 மனுதாரர்களும் எனது கணவரின் வருமானத்தை நம்பி வாழ்ந்து வருவதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது கணவரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையாலும் முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது எவ்வித தவறும் இல்லாததாலும் இரண்டாவது எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றாலும் மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம் /- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.